Libraries in Hosur and Denkanikotta taluks

* 25 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the steps that are being taken by the Government to supply adequate number of Telugu books, journals and newspapers to the Local Library Authorities in Hosur and Denkanikotta taluks; and

(b) the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஹோசூர், தெங்கனிக்கோட்டையிலுள்ள கிளை நூலகங்களில் தெலுங்கு மொழிப் பத்திரிக்கைகளும் வார, மாத, இதழ்களும் வாங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஹோசூர் தெங்கனிக்கோட்டை மற்றும் சில இடங்களிலுள்ள கிளை நூலகங்களிடமிருந்து வந்த வேண்டுகோளுக்கிணங்க, வார, மாத இதழ்களை அதிகமாக வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. ஹோசூர், அன்செட்டிலுள்ள கிளை நூலகங்கள் அதிகமாக தெலுங்குப் புத்தகங்களை வழங்க கேட்டுக் கொண்டுள்ளனர். நிதி நிலைமை அனுமதித்தால் புதிய புத்தகங்கள் கிளை நூலகங்களுக்கு வாங்கி வழங்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Hon. Minister for Education is kind and he has assured us that he would take steps to redress the grievances of the linguistic minorities. But in actuality, even though we have made representation in the District Development Council meeting, the local officers have not taken any steps to improve the situation. Even a few days back I was informed that in libraries in Hosur and Denknaikottai adequate number of Telugu books and journals and newspapers are not vailable. Some of the local officers appear to be fanatical or discriminatory in their outlook. So, may I know from the Hon. Minister whether he will take steps to appoint an officer to go into the matter and redress the grievances of the linguistic minorities at an early stage in this direction?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது குறிப்பிட்டபடி, ஹோசூர், தெங்கனிக்கோட்டை நூலகங்களில் ஆந்திர பிரபா, ஆந்திர பத்திரிகா, பிரஹதி, ஆந்திர ஜோதி, சந்திரமாமா, பாரதி போன்ற மாத இதழ்கள் போடப்படுகின்றன. ஆனால், தெலுங்குப் புத்தகங்களை, தெலுங்கு பேசப்படுகின்ற பகுதிகளிலே போடுவதற்கான ஏற்பாடுகளை

1972 டிசம்பர் 4]

செய்யவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. இப்பொழுது நூலகக் குழுவிற்கு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தெலுங்குப் புத்தகங்கள் தேவைப்படுகிற பகுதிகளில், இப்பொழுது போடவில்லையென்றால், அதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கைகள் எடுத்து அந்த நூலகங்களிலே அதிகமான தெலுங்கு புத்தகங்கள் போட ஏற்பாடு செய்யலாம்.

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் பகுதியிலும், பழனி பகுதியிலும், போடி பகுதியிலும் குடியிருக்கிற மக்கள் மொழிக் கொள்கைக்கேற்ப தமிழ் மொழியைப் பயின்று, தாய்மொழி இலக்கணப்படி கன்னடத்தை எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளமுடியவில்லை. அந்தப் பெரும் குறை எங்களுக்கு இருக்கிறது. எனவே, இந்த அரசு கன்னடத்தைத் தாய்மொழியாகப் பெற்றிருக்கிற எங்களுக்கு இந்த மொழியைக் கற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆனால், குறிப்பிட்ட மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், குறிப்பிட்ட மாணவர்கள் சேருவார்கள் என்ற உத்தரவாதம் கிடைக்குமானால் குறைந்தது 15 மாணவர்களாவது சேரவேண்டுமென்று இருக்கிறது—அதற்கான வசதிகளைச் செய்துதர இப்பொழுதே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையிலே 13 மொழிகளில் இப்படி பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

Siddha Dispensary in Secretariat

* 26 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the cost of maintenance of the Siddha Dispensary at the Secretariat for the years 1970–71 and 1971–72; and

(b) the steps taken to improve the Dispensary?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தலைமைச் செயலக அலுவலகத்தில் அமைந்துள்ள சித்த மருந்தகத்திற்கு 1970-71-ம் ஆண்டின் பராமரிப்புச் செலவு ரூ. 52,196.11-ம், 1971-72-ம் ஆண்டின் செலவு ரூ. 49,536.07-ம் ஆகும்.

(இ) முன்னர் இம்மருந்தகம் வசதியற்ற சிறிய அறையில் அமைக்கப்பட்டிருந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி மருந்து கொடுக்குமிடம் அமைந்த தாராளமான நல்ல வசதி செய்யப்பட்ட இடம் இப்போது